**பொரலஸ்கமுவ நனர சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பொரலஸ்கமுவ நகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானச் செலவினக் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அதிகாரம்) 181 (I) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.
இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொரலஸ்கமுவ நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுக் நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுக் நியமங்களுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.
நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை

வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நகர சபை செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சின் 2018 திசெம்பர் 31 ஆம் திகதி 4/2018 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் அறிவுறுத்தலின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டில் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கும் போது மீள் மதிப்பீடு செய்ய வேண்டும் என உள்ளூராட்சிமன்ற உதவி ஆணையாளரின் 2021 பெப்ரவரி 01 ஆம் திகதி மற்றும் LGD/10A/4/ந.கி/ 2019 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் நகரசபையால் 2021 ஆம் ஆண்டு சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டு இறுதிக்கு முன்னர் சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்து கணக்காய்வுக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பேன். | அனைத்து நிலையான சொத்துக்களையும் மீள் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டிற்காக மூலதன மானியமாக ரூபா 35,818,405 கிடைக்கப் பெற்றிருந்த போதும் விரிவான வருமானக் கூற்றின் 10 ஆம் இலக்கக் குறிப்பின் கீழ் மற்றும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றின் தேறிய சொத்துக்கள் / உரிமையின் கீழ் அம்மூலதன மானியம் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுப்பேன். | சரியாகக் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) முன்னைய ஆண்டுக்குரிய ரூபா 22,470,773 ஆன மூலதன மானியப் பெறுமதியில் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்களுக்காக பெறுமானத் தீர்வு விகிதத்திற்குச் சமமான சதவீதம் ஒன்று விரிவான வருமானக்கூற்றில் 5 ஆம் இலக்கத்தின் கீழ் (மீண்டெழொத செலவினத்திற்காக அரசின் | 2022 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கையளிப்புக்கள்) குறிப்பிடப்பட வேண்டிய போதிலும் சொத்துக்கள் மற்றும் பெறுமானத் தீர்வு சரியாகக் கணக்கீடு செய்யப்படாமையால் அது நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | முன்னைய ஆண்டின் மூலதன மானியப் பெறுமதியின் 5 ஆம் இலக்கக் குறிப்பின் கீழ் உள்ள பெறுமதி சீராக்கம் செய்யப்பட்டதன் பின்னர் எஞ்சிய பெறுமதி சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றின் இனங் காணப்படாத மூலதன மானியத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சரியாகக் கணக்கீடு செய்வாற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | சபை நிதியத்திலிருந்து செயற்படுத்தப் பட்டு பூர்த்தி செய்யப்படாத 06 செயற்திட்டங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு முடிவுறாத வேலைகளின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | முடிவுறாத வேலைகளைச் சீராக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | தொங்கல் கணக்கில் ரூபா 14,222,618 வரவு மீதி மற்றும் பரீட்சை மீதியில் ரூபா 23,792,237 ஆன இனங்காணப்படாத செலவு மீதிகளை இனங்கண்டு தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தொங்கல் கணக்கின் மீதி மற்றும் இனங் காணப்படாத மீதிகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற 02 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் அவற்றிற்குரிய பயன்பாட்டு ஆவணங்கள் ' அறிக்கைகளில் காணப்படும் மீதிகளுடன் ஒப்பிடும் போது நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,523,010 தொகை கூடுதலாவும் ரூபா 21,290 குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | அடுத்த ஆண்டில் சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுப்பேன். | வேறுபாடுகளை இனங்கண்டு கணக்கு மீதிகளை சீராக்கம் செய்ய வேண்டும். |
| (ஆ) | அட்டவணையின் பிரகாரம் சபை நிதியத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த 30 செயற்திட்டங்களின் பெறுமதி ரூபா 25,419,396 ஆக இருந்த போதும் நிதிக்கூற்றுக்களில் செயற் திட்டங்களின் பெறுமதி ரூபா 31,148,017 ஆக இருந்தமையால் ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் வீதிகளின் பெறுமதி ரூபா 5,728,621 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | 2022 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுப்பேன். | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.3 கணக்காய்வுகளுக்கான எழுத்து மூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 8,262,821 பெறுமதி யான நானாவித வைப்புக்கள் மீதிகளை உறுதிப்படுத்து வதற்காக அட்டவணைகள் சமர்ப் பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏதிர்காலத்தில் தயாரித்து சமர்ப்பிக்கின்றேன். | அவதானிப்பில் குறிப்பிட்ட பெறுமதியை உறுதிப்படுத்து வதற்கு அட்டவணைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 23,913,815 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 2,887,122 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்யாண்டின் போது வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதற்காக எழுதப்பட்ட ரூபா 474,282 பெறுமதியான 24 காசோலைகள் 2022 மே 27 ஆம் திகதி வரையும் குறித்த வாடிக்கையாளர் களுக்கு கையளிக்காமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. | கணக்காய்வின் போது வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படாது இருந்த காசோலைகளின் எண்ணிக்கை 24 என குறிப்பிட்டிருந்த போதும் 2021.12.31 ஆம் திகதி வரையில் எமது பதிவேடுகளின் பிரகாரம் 21 காசோலைகள் மாத்திரமே இருந்தன. அதன் பெறுமதி ரூபா 248,416 ஆகும். நாட்டில் காணப்பட்ட சீரற்ற நிலைமை மற்றும் கொரோனா தொற்று காரணமாக காசோலைகளை எடுத்துச் செல்வதற்கு வாடிக்கையாளர்கள் நிறுவனத்திற்கு வருகை தருவதில் குறைவு இருந்ததால் காசோலை பெற்றுக் கொள்வதில் குறைவொன்று அவதானிக்கப்பட்டது. தற்போது தொற்று நிலைமை குறைந்து வருவதால் எதிர்காலத்தில் குறித்த நபர்களுக்கு அறிவித்து காசோலைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். | எழுதப்பட்ட காசோலைகளை உடனடியாக வாடிக்கையாளர்க ளுக்கு வழங்கப்பட வேண்டும். |

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் வருமாறு :

| கணக்காய்வு அவதானிப்பு | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வீதவரியும் வரியும் | | |
| (i) | மீளாய்வாண்டிற்காகப் பட்டியலிடப்பட்ட வீதவரி வருமானம் ரூபா 27,383,560 ஆக இருந்த போதும் ரூபா 9,901,089 அதாவது 36 சதவீதத்தை ஆண்டில் அறவிடப்படுவதற்கு சபை தவறியிருந்தது. | பட்டியலிடப்பட்ட வருமானத்தில் மீளாய்வாண்டிற்காக 64 சதவீதம் அறவிடப்பட்டுள்ளது. நடப்பாண்டிற்காக இறுதிக் காலாண்டு கொடுப்பனவு செய்யாததற்கு எதிராக சட்ட அதிகாரத்தைச் செயற்படுத்த அடுத்த ஆண்டின் போது காலாண்டின் முதலாவது 10 மாதங்களுக்குள் முன்னர். ஆகும். அவ்வாறே நாட்டில் காணப்பட்ட 2021 ஆம் ஆண்டு கொவிட் தொற்று நிலைமை காரணமாகக் கொண்டு நாடு மூடப்பட்ட காரணத்தால் ஆதனங்களைத் தடை செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படா ததுடன் தற்போது கொடுப்பனவைத் தவிர்ப்புச் செய்பவர்களுக்கு பிடிவிறாந்து பிறப்பித்து நிலுவை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | முன்னைய ஆண்டிற்குரிய வீதவரி கடன்பட்டோர் மீதி ரூபா 20,380,136 ஆக இருந்த போதும் அதில் மீளாய்வாண்டில் ரூபா 7,669,054 தொகை அறவிடப் பட்டிருந்ததுடன் ரூபா 12,711,082 ஐ அறவிடுவதற்கு சபை தவறியிருந்தது. அதன் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை வீதவரி மீதி ரூபா 28,269,300 ஆக இருந்தது | 2021.12.31 இல் காணப்பட்ட மொத்த நிலுவையில் 38 சதவீதம் அறவிடப்பட்டிருந்தது. இக்காலப்பகுதியில் நாட்டில் காணப்பட்ட கொவிட் தொற்று நிலைமை காரணமாகக் கொண்டு நாடு மூடப்பட்ட காரணத்தால் ஆதனங்களைத் தடை செய்யும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படாததுடன் தற்போது கொடுப்பனவைத் தவிர்ப்புச் செய்பவர்களுக்கு பிடிவிறாந்து பிறப்பித்து நிலுவை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | - மேற்படி - |
| (ஆ) | வாடகை | | |
| (i) | மீளாய்வாண்டிற்காக பட்டியலிடப்பட்ட வியாபார நிலைய வாடகை வருமானம் ரூபா 990,300 ஆக இருந்த போதும் அதில் ரூபா 415,554 அதாவது 41 சதவீதம் | 2021 ஆம் ஆண்டு கொவிட் தொற்று நிலைமை காரணமாக 2021 ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரை நாடு அவ்வப்போது மூடப்பட்டமையால் இந்த வியாபார நிலையங்களும் மூடப்பட்டிருந்தன. ஆதலால் | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டில் அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் வாடகை சலுகை வழங்கப்பட்ட பின்னரும் செலுத்தப்படாத வியாபார நிலையங்களுக்கு அறிவிக்கும் கடிதங்கள் வழங்கப்பட்டன. | |
| (ii) | கடை வாடகை உடன்படிக்கையின் 12 ஆம் இலக்க நிபந்தனை மற்றும் 1980 திசெம்பர் 31 ஆம் திகதி 1980/46 ஆம் இலக்க உள்ளூராட்சிமன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை கடை வாடகை திருத்தப்பட வேண்டிய போதிலும் 2009 ஆம் ஆண்டின் பின்னர் கட்டண திருத்தமொன்றோ அல்லது உடன்படிக்கையை புதுப்பிதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டு உடன்படிக்கை நாளதுவரையாக்குவதற்காக வியாபார நிலையங்களில் உடன்படிக்கை செய்யப்பட்ட உரிமையாளர்கள் இச்சபைக்கு அழைக்கப்பட்டு உடன்படிக்கை செய்ய வேண்டும் என அறிவிக்கப்பட்டது.<br>எனினும் அனைத்துக் கடை உரிமையாளர்களும் உடன்படிக்கை செய்வதற்காக எதிர்ப்பைத் தெரிவித்து கூட்டத்தை பகிஷ்கரித்து சென்றனர். அச்சந்தர்ப்பத்தில் உள்ளூராட்சிமன்ற ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டு ஆலோசனைகளை பெற்றுக் கொண்டதுடன் ஏற்பட்ட நிலைமையின் பேரில் குறித்த நடவடிக்கைகளை தற்காலிகமாக இடைநிறுத்தப் பட்டதாக அறியத் தருகிறேன். | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (iii) | கடை வாடகை உடன்படிக்கை 03 ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்க வேண்டிய போதிலும் 39 உடன்படிக்கைகள் அவ்வாறு செய்யப்படாது இருந்ததுடன் உடன்படிக்கை செய்யாமல் 03 கடைகள் நடாத்திச் செல்லப்பட்டிருந்தன. | .இந்த இடங்களில் வாகனம் நிறுத்தும் இடங்கள் இல்லாமல் இருந்ததுடன் வீதியை விரிவாக்கும் போது கடைகளின் அளவு குறைந்துள்ளது. இவ்வியாபார நிலையங்களை உடைத்து அகற்றுவதற்கு உள்ளதால் வீதி அபிவிருத்தியின் போது புதிய இடங்களில் நிறுவுவதற்கு உத்தேசிக் கப்பட்டுள்ளதால் மதிப்பீடு மேற் கொள்ளப்பட்டது. புதிய இடங்கள் ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் புதிதாக உடன்படிக்கை மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கை 03 ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வருடாந்த பாதுகாப்பு சேவை வழங்குதல் விலை கோரல் இன்றி பாதுகாப்பு சேவை எல்லையுடன் ரத்னா லங்கா நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 6,250,419 கொடுப்பனவு | பாதுகாப்பு சேவை வழங்குதல் சிவில் பாதுகாப்பு தரப்பினர் மூலமாக இருந்த போதும் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் 2020.01.13 ஆம் திகதி CSD/08/12/01/01 ஆம் இலக்க | வருடாந்த விலைகோரல் மேற்கொள்ள நடவடிக்கை வேண்டும் |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்டிருந்தது. மேலும் 12 பாதுகாப்பு நிர்வாக உத்தியோகத்தர்கள் மணித்தியால 02 சேவை தடவையில் அதாவது (01 நாள்) மிகைத்து சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் சில பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தொடர்ச்சியாக 10 நாட்களை மிகைத்து சேவையில் ஈடுபட்டிருந்தனர். | கடிதத்தின் பிரகாரம் குறித்த தரப்பினரை வெளியேற்றி ரக்னா பாதுகாப்பு லங்கா கம்பனிக்கு பாதுகாப்பு சேவை கடமைகள் கையளிக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் 2022 ஆம் ஆண்டின் இறுதி வரை பணியகத்திடமிருந்து பாதுகாப்புச் சேவைகள் வழங்குவதற்கு உரிய விலைகோரல் விலை கோரப்பட்டிருந்தது. பாதுகாப்புச் சேவை உத்தியோகத்தர்கள் குறித்த நிறுவனத்தின் மூலம் ஈடுபடுத்தப்படுவதுடன் இது தொடர்பாக ரக்னா பாதுகாப்பு லங்கா கம்பனியிடம் விசாரித்து எதிர்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | |

### 3.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வியாபார அனுமதிப் பத்திரங்கள் வழங்குவதற்காக 161 வியாபார நிலையங்களில் இருந்து அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருந்த போதும் 2022 ஜனவரி 31 ஆம் திகதி வரை அந்த அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் காணப்பட்ட கொவிட் நிலைமை அடிப்படையில் அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்காக பொதுச் சுகாதார பரிசோதகரின் பரிந்துரை கிடைக்காமையால் சில அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கு தாமதமாக இருந்த போதும் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது | வியாபார அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவும்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் பிரகாரம் காணப் பட்ட 19 ஆதனங்களில் 18 இற்குரிய உரித்தினை உறுதிப்படுத்துவதற்கு உறுதி அல்லது கையளிப்பு கட்டளை காணப்படவில்லை. ஆதலால் இந்த ஆதனங்கள் ஏனைய நபர்களால் அத்துமீறி கைப்பற்றப்பட்டு இருந்த போதும் அதற்காக சட்ட நடவடிக்கை எடுப்பதில் சிக்கல் காணப்பட்டது. | கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள 18 ஆவணங்களில் 12 இன் உரித்து உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன் அந்த 12 ஆதனங்களுக்காக உறுதிகள் அல்லது கையளிப்புக் கட்டளைகள் சபையிடம் உள்ளன. | உறுதி அல்லது கையளிப்பு கட்டளை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சபைக்குச் சொந்தமான காணி தொடர்பாக வருடாந்த பொருள் மதிப்பீடு நீண்ட காலமாக மேற்கொள்ளப்படாது இருந்தமையால் இந்த ஆவணங்களில் உள்ளமை மற்றும் சபையின் உரித்தை உறுதிப்படுத்துவதற்காக எடுக்கப்பட்டிருந்த பாதுகாப்பு நடவடிக்கை தொடர்பாக கணக்காய்வுக்குத் தகவல்கள் உறுதிப்படுத்தப்படவில்லை. | நகர சபையின் ஆதனங்களை உறுதிப்படுத்துவதற்கு நிலையான சொத்துக்கள் குழு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் ஆதனங்களை உறுதிப்படுத்தும் நடவடிக்கை எதிர்காலத்தில் மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளோம். | வருடாந்த சொத்துக்கள் கணிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | ரூபா 1,196,310 செலவில் நிர்மாணிக்கப்பட்ட பொது மலசலகூட முறைமை சபைக்குச் சொந்தமான சொத்தொன்றாக ஆவணங்களில் பதிவு செய்யப்படாமல் இருந்ததுடன் குத்தகை வழங்கி சபைக்கு வருமானம் உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மலசலகூட முறைமை குத்தகைக்கு வழங்குவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத் தருகின்றேன். | சபைக்குச் சொந்தமான ஆதனங்களாக பதிவேடுகளுக்கு உட்படுத்தி குத்தகை வருமானம் உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 15 கட்டிடங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் 2018 திசெம்பர் 31 ஆம் திகதி கொம்ப்ரோலர் நாயகத்தின் அலுவலகத்தினால் வழங்கப்பட்டிருந்த நிதி அல்லாத சொத்துக்களின் மதிப்பீடு வழிகாட்டலுக்கு இணங்க மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | வுழிகாட்டல்களுக்கு இணங்க மதிப்பீடு செய்யப்பட வேண்டும் |